T.C.027

074/DD/25

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SPECIAL LANGUAGE TEST FOR OFFICERS OF THE EDUCATION DEPARTMENT HIGHER STANDARD – FIRST PAPER – TAMIL (TEXT AND TEXTUAL GRAMMAR)

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

### பகுதி – I

**எவையேனும் ஆறு வினாவிற்கு விடை தருக.** **(6 × 4 = 24)**

1. ‘பலகை’ என்பதைத் தொடர்மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

2. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

4. ‘சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான் புதியவர்களைப் பார்த்து கத்துவானே தவிர கடிக்க மாட்டான்’ என்று இறமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார். இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

5. நான்கனுக்கு இலக்கணக் குறிப்பு தருக :

   (அ) ஊழ் ஊழ்

   (ஆ) செந்தீ

   (இ) வியத்தல்

   (ஈ) ஆடுக

6. நான்கனுக்கு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

   (அ) தாமரை இலை நீர் போல

   (ஆ) மழைமுகம் காணாப் பயிர்போல

   (இ) கண்ணினைக் காக்கும் இமை போல

   (ஈ) சிலைமேல் எழுத்து போல

[Turn over

7. நான்கனுக்கு பொருள் தருக :

(அ) சேக்கை

(ஆ) படலை

(இ) அள்ளல்

(ஈ) கொண்டல்

8. நான்கினை பிரித்து எழுதுக :

(அ) முத்தமிழ்

(ஆ) சங்கப்பலகை

(இ) வணிகக் கப்பல்

(ஈ) நீரலை

## பகுதி – II

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக. (6 × 6 = 36)**

1. வாய்மை பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக.

2. ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

3. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருளை விளக்குக.

4. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவை எனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

5. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது – இவை அனைத்தையும் யாம் அறிவோம் இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

6. பழமொழிகளை நிறைவு செய்க.

(அ) ———— பண்டம் குப்பையிலே

(ஆ) ———— சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

(இ) ———— உள்ளளவும் நினை.

(ஈ) ———— மருந்தும் மூன்று நாள்.

(உ) ———— மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

(ஊ) ———— கல்.

7. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார் அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

## பகுதி – III

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.** **(4 × 10 = 40)**

1. போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.

2. புயலின் போது கடைபிடிக்க வேண்டிய செயல்கள் யாவை?

3. ஊர்தி ஓட்டுநருக்கான நெறிமுறைகள் யாவை?

4. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

5. குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித் தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் நிகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி, அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

   இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

---